செ.வெ. எண்: 723 நாள்: 5–12–2011.

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், திருமதி செல்வி இராமஜெயம், அவர்கள் இன்று 05.12.2011 (திங்கட்கிழமை) காலை 11.00 மணி அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சத்தியவாணிமுத்து நகரில் செயல்பட்டு வரும் 9 குழந்தைகள் நல மையங்களை திடீரென ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் உடன் இருந்தனர்.

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் தினசரி காலை உணவு மற்றும் மதிய உணவு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் அறிந்தார்கள். அரிசியின் தரம் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தரமான அரிசியை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் என்றும், மேலும் சுகாதாரமான முறையில் சமையல் செய்து அதை விநியோகித்திட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். குழந்தைகளுக்கு கல்வி செல்வத்தை போதிப்பதோடு, எதிர்காலத்தில் அவர்களின் செயல்பாடுகள் உறுதியாக அமையும் வண்ணம் விளையாட்டுகளிலும் ஈடுபடுத்தி அவர்களின் செயல்திறனை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு முறையை குறித்து மையத்தில் தினசரி கால அட்டவணையை பார்வையிட்ட அமைச்சர் அவர்கள் அவ்வட்டவணைப்படி உணவுகள் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அங்கன்வாடி மையங்களில் தண்ணீர் பற்றக்குறையை பற்றி கேள்விப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை சரிய செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**